கொக்குவில் கோண்டாவிலில்

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் [illegible] திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆவணி 14 இதழ் 194
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 30 — 8 1993


## விமானக் குண்டுவீச்சால் மூவர் பலி 10 பேர் படுகாயம்

(யாழ்ப்பாணம்) நண்பகல் 1-30 மணியளவில் கொக்குவில்-கோண்டாவில் இப்பகுதியை ஹெலி கொப்டர் ஒன்று சுற்றிவட்டமிட்ட பின்பே விமானத்தால் 1-40 மணியளவில் இடம்பெற்ற விமானத் தாக்குதல் இடம்பெற்றது. 1-35 வில் இளைஞர் ஒருவரும், ஒரு பெண்ணும், ஓர் ஆணும் பலியானதுடன், பத்துப் பேர் வரை படுகாயமடைந்தனர். பகுதியில் நேற்று நண்பகல் மணியளவில் கொக்குவில் நந்தாவில் அம்மன் கோவில் பகுதியில் வீடொன்றின் மீது (2-ம் பக்கம் பார்க்க)

## தும்பளையில் ஷெல் வீழ்ந்து சிறுமி உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்) 'டோரா' படகு மூழ்கடிக்கப் பட்டதைத் தொடர்ந்து இடம்பெற்ற விமானக்குண்டு வீச்சை அடுத்து பலாலி இராணுவ முகாமிலிருந்து நேற்று பருத்தித்துறை பகுதியை நோக்கி கடும் ஆட்லறி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. பருத்தித்துறை தும்பளைப் பகுதியில் விழுந்த இச்ஷெல் ஒன்று ஒரு வீட்டின் மேல் விழுந்து வீடு தரைமட்டமாகி (2-ம் பக்கம் பார்க்க)

## ● பருத்தித்துறை கடலில்

# பீரங்கி படகு தகர்த்து அழிப்பு

## 4 அதிகாரிகள் உட்பட 12 கடற்படையினர் பலி

## கரும்புலிகள் வீரகாவியம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை கடற்பரப்பில் நேற்றுக்காலை கடற்படையினரின் நவீனரக 'டோரா' பீரங்கிப்படகு ஒன்று விடுதலைப் புலிகளின் கடற் கரும் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டது. இத்தாக்குதலில் 4 அதிகாரிகள் உட்பட 12 கடற்படையினர் உயிரிழந்ததாக அரசு தரப்பு செய்திகள் தெரிவித்தன.

## வழிமறித்து புலிகள் சமர்

நேற்றுக்காலை 9-00 மணிக்கு காங்கேசன்துறை இராணுவ தளத்திலிருந்து புறப்பட்டு காங்கேசன்துறை நோக்கி சென்று கொண்டிருந்த இவ் டோராப் பீரங்கிப் படகினை பருத்தித்துறை ஆழ்கடலில் வழிமறித்த கடற்புலிகள் இப்படகின்மீது கடும் தாக்குதல் தொடுத்தனர். கடற்புலிகளின் நான்கு விசைப்படகுகள் 'டோராப்' படகை வழிமறித்து உக்கிர தாக்குதல் தொடுத்தன. இதனையடுத்து விடுதலைப் புலிகளின் கடற்புலிகளுக்கும் கடற்படையினருக்கும் இடையில் நடுக்கடலில் கடும் மோதல் இடம் பெற்றது.

## வெடிமருந்து படகு தாக்கியது

நடுக்கடலில் கடும் மோதல் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் சுமார் 10-30 மணியளவில் கடற்புலிகளின் கரும்புலிகளான கப்டன் புகழரசன், கப்டன் மணியரசன் ஆகியோர் வெடிமருந்து நிரப்பப்பட்ட படகில் ஊடறுத்துச் சென்று தாக்குதல் நடாத்திக் கொண்டிருந்த 'டோரா' மீது மோதி அப்பீரங்கிப் படகை நிர்மூலமாக்கினர்.

வெடிமருந்துடன் வந்த புலிகளின் படகு எவ்வாறு 'டோரா'வை நெருங்கி நேரடியாக அதனை முட்டித் தாக்கியது என்பது குறித்து கருத்துகூற கடற்படை அதிகாரிகள் கொழும்பில் மறுத்துவிட்டார்களாம்.

எனினும் இவ்வாறானதொரு தாக்குதல் மிகவும் வியப்பளிப்பதாகவும் புலிகளின் திறமையை வெளிப்படுத்துவதாகவும் பி. பி. ஸி. தெரிவித்தது.

## சடலங்களை மீட்க அரசு முயற்சி

"டோரா' படகு நிர்மூலமாக்கப்பட்டதால் அதிலிருந்த நான்கு கடற்படை அதிகாரிகள் உட்பட 12 கடற்படையினர் உயிரிழந்தனர். உயிரிழந்தவர்களின் சடலங்களை விடுதலைப்புலிகள் கைப்பற்றியிருக்கலாமென இராணுவ வட்டாரங்களை ஆதாரம் காட்டி வெரித்தாஸ் கூறியது.

உயிரிழந்தவர்களின் சடலங்களை அல்லது காணாமல் போன படையினரை மீட்கும் முயற்சி நடைபெறுவதாக இராணுவ தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

எனினும் தற்கொலைப்படைத் தாக்குதலால் கடற்படையினரின் உடல்கள் சின்னாபின்னமாகிப் போயிருக்கலாமெனவும் அவர்களது சடலங்களை மீட்பது கடினமெனவும் இராணுவ வட்டாரங்கள் கூறின.

## நவீன ஆயுதங்கள் பல மீட்பு

கடற் கரும்புலிகளின் தாக்குதலுக்குள்ளாகி, எரிந்து மூழ்கிக்கொண்டிருந்த 'டோரா' வில் இருந்து விடுதலைப் புலிகள் பல நவீன ஆயுதங்களைக் கைப்பற்றியுள்ளனர்.

இந்த ஆயுத மீட்பில், 20 எம். எம். பீரங்கி (அஸ்ரா/ஓ எலிகன் 419 ரகம் பன்முகத் தேவைக்கான சிறு பீரங்கி)-2, 50 கலிபர் துப்பாக்கி-2, மேற்குறிப்பிட்ட பீரங்கிகளுக்கு உரிய ஷெல்கள் மற்றும் ரவைகளும், வெடிமருந்துப் பொருட்களும் பெருமளவில் கைப்பற்றப்பட்டுள்ளன. புலிகள் கைப்பற்றிய இரண்டு பீரங்கிகளும், கடற்படையினருக்குப் பெரும் இழப்பை ஏற்படுத்தி இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## படகு முற்றாக மூழ்கிவிட்டது

பருத்தித்துறை கடலில் காலை 9-20 மணிக்கு இம்மோதல் ஆரம்பித்து உக்கிர சண்டையின் பின் 10-30 மணிக்கு இப்படகு தகர்க்கப்பட்டு பின் ஆயுதங்கள் கைப்பற்றப் (4-ம் பக்கம் பார்க்க)

## கடற் கரும்புலிகள் இருவர் வீரச்சாவு

(யாழ்ப்பாணம்) நேற்றுக் காலை பருத்தித்துறைக் கடற்பரப்பில் மேற்கொள்ளப்பட்ட கரும்புலித் தாக்குதலில், மேஜர் புகழரசன் அல்லது புவீந்திரன் (சுப்பிரமணியம் நாககீதன் - அரியாலை, யாழ்ப்பாணம்), கப்டன் மணியரசன் (வேதநாய (2-ம் பக்கம் பார்க்க)

## புலிகள் அழித்த 2வது 'டோரா' படகு

(யாழ்ப்பாணம்) கடற்புலிகளால் தகர்க்கப் பட்ட இரண்டாவது 'டோராப்' படகு இதுவாகும்.

கடந்த ஆண்டு ஏப்ரல் 3ம் திகதி மாதகல் கடலில் வைத்து ஒரு டோரா விசைப்படகு கடற்புலிகளால் தகர்க்கப்பட்டது. இவ் டோராப் படகு இஸ்ரேலில் தயாரிக்கப்பட்டதாகும். 40 அடி நீளம் (4-ம் பக்கம் பார்க்க)

## புகை கக்கியபடி பொம்மர் சென்றது

(யாழ்ப்பாணம்) கொக்குவில், கோண்டாவில் பகுதியில் தாக்குதல் நடாத்திய விமானங்கள் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் ஒரு பொம்மர் புகை கக்கியவாறு உடனடியாக பலாலி முகாமுக்குச் சென்றதாக தெரிவிக் (2-ம் பக்கம் பார்க்க)

## இராணுவ செலவை அதிகரிக்க முடிவு

(கொழும்பு) இலங்கை இராணுவத்திற்கு ஒதுக்கீடு செய்யப்படும் நிதியை மேலும் அதிகரிக்க ஜனாதிபதி திரு விஜேதுங்க முடிவு செய்துள்ளார்.

இதற்கேற்ப இலங்கை இராணுவத்தின் கூடுதல் செலவுகளுக்காகவும், அகதிகளை பராம (2-ம் பக்கம்பார்க்க)

## பூநகரி முகாமை புலிகள் தாக்கலாம்

(கொழும்பு) பூநகரி இராணுவ முகாம் மீது தாக்குதல் நடாத்த புலிகள் திட்டமிட்டிருப்பதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பயணிகளின் போக்கு (4-ம் பக்கம் பார்க்க)

## விளம்பரம்

### PITAWAKKA PLUS

மதுபானத்தால் ஏற்படும் ஈரல் வியாதிகளுக்கும் வேறு மருந்துகளால் உடலில் ஏற்படும் நச்சுத்தன்மைகளுக்கு மாக 9 வகை மூலிகைகள் அடங்கியது. கிடைக்குமிடம்: எஸ். ரி. மெடிக்கல்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (கி-374)

### வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், வலிப்புநோய், பீநிசம், தலையிடி, தலை சாலவியல், சரும நோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப் போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், கைப்பேறின்மை, வீரியக் குறைவு மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியகலாநிதி சி. இராசரத்தினம் 121, 2-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (கி-416)

### வியாழ மாற்றம் பலாபலன்கள்

"ஜோஸ்யர்" முத்திரை, சிறுவர்களுக்கு அறிவுநூல், கல்விப்புலத்துக்கு ஆய்வுநூல் பாமரர்களுக்கு பன்னிரண்டு இராசிகளுக்கும் பலாபலன்கள் சிறிகாந்தா, மகமின் புத்தகசாலைகள் யாழ்ப்பாணம். (வியாபாரிகளுக்கு கழிவுண்டு) (422)

### ஆப்பெரிக்க சிக்கன சாதனம்

விறகுத்தட்டுப்பாடு என்ற கவலையா? சாம்பல் கரியின் தொல்லையா? அடுப்பெரிய வைக்க அதிக செலவு என்ற ஏக்கமா? கணகணப்பாக வெப்பம் தரும் சாணி விருட்டி இலகுவானது. சிரமமற்றது. விருட்டி ஒன்று ரூ. 1/- மட்டுமே. "மிக்கவைற்" (எ-3381)


### புகை கக்கியபடி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கப்படுகிறது.

கொக்குவில் நந்தாவில் அம்மன் கோவில் வீதியில் தாக்குதல் நடாத்திய பொம்மர் மீண்டும் அவ்விடத்திற்கு தாக்குதல் நடாத்த கீழ் பதிந்து வந்த போதே புலிகள் பொம்மர் மீது தாக்குதல் நடத்தினர்.

இதனையடுத்து பொம்மரின் ஒருபகுதிலிருந்து கரும்புகை கிளம்பியதாக நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர். புலிகளின் தாக்குதலை எடுத்து பொம்மர் குண்டு வீசாமலே சென்று விட்டதும் குறிப்பிடத்தக்கது. இ

### இராணுவ

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மரிப்பதற்காகவும் அரசுச் செலவில் பத்துசத வீதத்தை குறைக்க ஜனாதிபதி பணித்துள்ளார்.

இந்த நிதி அதிகரிப்பை யடுத்து வடக்கு-கிழக்கில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரை அரசு தீவிரப்படுத்துமெனவும் கூறப்படுகிறது.

ஜனாதிபதியின் இந்த உத்தரவால் அரசப்பணியாளர்களின் சம்பளமும், ஓய்வூதியமும் பாதிக்கப்படமாட்டாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-இ)

# விறகு தறிப்பதனை ஒழுங்குபடுத்த புதிய நடைமுறைகள்

யாழ். குடாநாட்டிலே விறகுக்காகக் கண்டபடி மரங்கள் தறிப்பதனை ஒழுங்குபடுத்துவதோடு மீள் நடுகையினையும் மேற்கொள்ளும் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதன்படி எதிர்வரும் 01-09-93-ம் திகதி முதல் விறகு கொண்டுசெல்வதற்கான அனுமதிப்பத்திரம் வழங்கும் நடவடிக்கை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் நடைமுறைப்படுத்தவுள்ளது.

நடைமுறைப்படுத்தப்படவுள்ள விதிமுறைகள் வருமாறு:

01. கூடுதலான காட்டுமரங்கள் தறிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுவதை தவிர்த்து ஒருமுகப்படுத்தும் வகையில் தென்மராட்சியில் ஒரு விறகு விற்பனை நிலையம் அமைக்கப்பட்டு விறகுகள் கொள்வனவாளர்களுக்கு வழங்கப்படும்.

02 (1) மேற்படி நிலையத்தில் கொள்வனவு செய்து கொண்டு வருவதற்கான அனுமதிப்பத்திரத்தை கொள்வனவாளர்கள் பனை வட்டத் தொடர்பாளரிடம் பெற்றுக்கொள்ள வேண்டும்.

(2) உள்ளூரில் ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு விறகு எடுத்துச் செல்வதாக இருந்தாலும் அனுமதிப்பத்திரம் பெறவேண்டும். இதற்கான அனுமதி கோரும் விண்ணப்பப்படிவத்தை அவ்வப்பகுதி வட்டத் தொடர்பாளரிடம் இருந்து பெற்று பூர்த்திசெய்து கொடுத்தல் வேண்டும்.

03. போக்குவரத்து அனுமதிப்பத்திரம் கோரும் விண்ணப்பதாரியிடம் இருந்து விறகின் அளவுக்கு ஏற்ப நிதி அறவிடப்படும். இந்நிதி திட்டமிட்ட வகையில் மரக்கன்றுகள் மீள்நடுகைக்கு பயன்படுத்தப்படும்.

04. வழங்கப்படும் அனுமதிப்பத்திரமானது வழங்கப்பட்ட நேரத்திலிருந்து 24 மணி நேரத்திற்கு செல்லுபடியாகும். இதனை ஒரேயொரு தடவை மட்டுமே பயன்படுத்த முடியும். வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரமானது விறகு கொண்டு செல்லும் முன்னரே காலாவதியாகும்போது அனுமதி வழங்கிய வட்டத்தொடர்பாளரினால் உறுதிப்படுத்தப்பட்டு புதுப்பிக்கப்படல் வேண்டும்.

05. அனுமதியின்றி விறகு கொண்டு செல்வது இனம் காணப்படும் பட்சத்தில் தமிழீழ காவல்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டு கொண்டுசெல்லும் விறகின் 3 மடங்கு பணம் அறவிடப்படுவதுடன் விறகும் பறிமுதல் செய்யப்படும்.

06. ஒவ்வொரு வட்டங்களிலும் நிதித்துறையால் பதிவு செய்யப்பட்ட விறகு விற்பனை நிலையங்களில் நுகர்வோர் தத்தமது தேவைக்காக கொள்வனவு செய்யும்போது அந்நிலையத்தால் வழங்கப்படும் பற்றுச்சீட்டுடன் கொண்டுசெல்ல அனுமதிக்கப்படுவர். (இதற்கு பிரத்தியேக அனுமதிப் பத்திரம் தேவைப்படாது)

07. தென்னை, பனை மட்டைகள், தேங்காய் மட்டைகள், சிராய்கள், ஊமல் போன்றவை கொண்டு செல்வதற்கு அனுமதிப்பத்திரம் பெறப்படத் தேவையில்லை.

08. அனுமதி பெறப்படாது கொண்டுவரப்பட்ட விறகுகள் காவல்துறையினரால் பறிமுதல் செய்யப்படும். இந்த விறகுகள் அல்லது மரங்கள் பொது ஏலத்தில் விடப்படும்.

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பான மேலதிக விபரங்களை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன வட்டத் தொடர்பாளரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

(ஏ-3383)

### கொக்குவில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பொம்மர் ஒன்று தாக்கியதில் வீடு இடிந்து முற்றாகச் சேதமடைந்தது

வீட்டிலிருந்தவர்கள் தெய்வாதீனமாக காயம் எதுவும் இன்றி உயிர்தப்பினர். இதன்போதே கோண்டாவிலைச் சேர்ந்த ஐ. மயில்வாகனம் (வயது 51) எனும் வயோதிபர் படுகாயமடைந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு, அங்கு மரணமானார்.

இதனையடுத்து மற்றொரு பொம்மர் கோண்டாவில் இருபாலை வீதியை அண்டிய பகுதியில் ஒரு குண்டை வீசித் தாக்கியது. இதனால் இப்பகுதியைச் சேர்ந்த சரோஜாதேவி எனும் பெண் ஸ்தலத்திலே துடிதுடித்து பலியானார். கோப்பாய் தெற்கைச் சேர்ந்த உருத்திராபதி உதயகுமார் (வயது 19 என்ற இளைஞரும் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார்.

இத்தாக்குதலில் பத்திற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். காயமடைந்தோர் விபரம் வருமாறு: வசந்தன் (33 வயது-நீர்வேலி), கோவிந்தசாமி (65 வயது-புத்தூர்), சிவகுமாரன் (45 வயது-கோண்டாவில்), தவமணி (30 வயது-நல்லூர்), கிருஷ்ணபிள்ளை (74 வயது-பனை), மொறிஸ் (வயது 17) அச்சுவேலி, ஜெயரட்ணராஜா (வயது 32-திருநெல்வேலி), மோகனதாஸ் (வயது 13-கோண்டாவில்).

விமானங்கள் மீது புலிகள் மேற்கொண்ட திடீர் தாக்குதலையடுத்து விமானங்கள் தாக்குதலை கைவிட்டு திரும்பின. (162-157-56-இ)

## இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். அரியாலை நீர்நொச்சித் தாழ்வு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய இரதோற்சவம் இன்று 30ம் திகதி திங்கட்கிழமை காலை நடைபெறும். மறுநாள் செவ்வாய்க்கிழமை தீர்த்தோற்சவம் நடைபெறும். (162)

000

(யாழ்ப்பாணம்)

யாழ். புதிய கல்வி நிலைய பரிசளிப்பு விழா இன்று 30ம் திகதி திங்கட்கிழமை பி.ப. 4 மணிக்கு கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

000

(மானிப்பாய்)

நவாலி சந்திரான் முருகமூர்த்தி கோவில் ரதோற்சவம் இன்று 9-15 மணி முதல் நடைபெறும்.

இவ் உற்சவத்தை யொட்டி பன்னிரு திருமுறைகள் என்னும் விடயம் பற்றிய தொடர் விரிவுரை மு.க. மாலிலாமணி நிகழ்த்திவருகிறார். (71)

000

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்ட கணித விஞ்ஞான மூலவள நிலையத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட வெளிமாவட்ட கணித, விஞ்ஞான ஆசிரியர்களின் விசேட செயலமர்வு இன்று காலை 9 மணிக்கு இடம்பெறும். (154)

000

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை ஆத்திசம்பதி அருள்மிகு ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் ஆலய ஸ்ரீ நடராசர் சிவகாமசுந்தரிக்கு இன்று திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு 108 சங்காபிஷேகமும், பூசை வழிபாடும் ஆராதனைகளும் இடம்பெறும். (154)

000

(கொழும்புத்துறை)

யாழ். புனித அடைக்கல மாதா ஆலய வருடாந்தத் திருவிழா இன்று 30-ம் திகதி திங்கட்கிழமை மாலை 4-30 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்துத் தினங்கள் இடம்பெறும். (154)

000

(பருத்தித்துறை)

பருத்தித்துறை வியாபாரி மூலை அருள்மிகு சித்திவிநாயகராலயத்தில் இன்று தேர்த் திருவிழாவும், நாளை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது. (52)

### கடற் கரும்புலிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கம் ராஜரூபன் - மணற்காடு குடத்தனை) ஆகியோர் வீரச்சாவு அடைந்தனர்.

மேஜர் புகழரசன் ஆனையிறவுச் சமர் உட்படப் பல போர்களில் பங்குபற்றியவர் என்பதும், சமரில் காயமடைந்து கால் வலுவிழந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கப்டன் மணியரசன் கரும்புலித் தாக்குதலில் ஈடுபட்டவர்களில் வயதில் குறைந்தவர் என்பதும், கடற்புலிகளின் தொடர்பு சாதனப் பிரிவில் கடமையாற்றியவர் என்றும் தெரியவருகிறது இவரது வயது 16 ஆகும்.

இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறனர். -ஈ-இ

### தும்பளையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யதும் வீட்டினுள் இருந்த ஒரே குடும்பத்தை சேர்ந்த நான்கு பிள்ளைகளில் ஒன்று அவ்விடத்திலேயே துடிதுடித்து மரணமானது. ஏனைய மூன்று குழந்தைகளும் படுகாயமடைந்தன. வீட்டின் இடிபாடுகளுக்கிடையில் இருந்து அயலவர்களால் இவர்கள் மீட்கப்பட்டனர்.

இச்சம்பவத்தில் ரவீந்திரன் பிரபா (வயது 14) என்ற சிறுமியே மரணமானவராவர் இவரது சகோதரர்களான த. சுதன் (வயது 4) த. வாசகி (வயது 8) த. இருபா (வயது 11) ஆகிய மூவருமே படுகாயமடைந்தவர்களாவர்.

காயமடைந்தவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஷெல் தாக்குதல் தொடர்ந்தும் நடைபெற்றுக் கொண்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டது. (55-162-157-160இ)


## ஆவணி ஓண திருவிழா

காரைநகர் புதுறோட் சி. மு. கேணியடி
ஞான வைரவர் கோவில்
திருவிழாவை முன்னிட்டு
யாழ்ப்பாணம் பஸ் நிலைய
ஞானவைரவர் கோவிலில்
**(1008) சங்காபிஷேகம்**
இன்று திங்கட்கிழமை நண்பகல்
12-00 மணிக்கு நடைபெறும்.

அத்தருணம் ஈழத்தின் தலைசிறந்த நாதஸ்வர, தவில் வித்துவான்களின் கச்சேரிகள் இடம்பெறும். சமயச் சொற்பொழிவும் நடைபெறும்.

பகல் 1-30 மணி

| தவில் | நாதசுரம் |
|---|---|
| K. நித்தியானந்தம் | N. K. பத்மநாதன் |
| N. K. வீராச்சாமி | S. கேதீஸ்வரன் |
| P. முருகதாஸ் | A. சுதந்திரன் |
| S. வீராச்சாமி | N. K. கணேஷன் |

3-30 மணி

| தவில் | நாதசுரம் |
|---|---|
| T. உதயசங்கர் | V. K. பஞ்சமூர்த்தி |
| N. R. S. ரவீந்திரன் | V. K. கானமூர்த்தி |
| N. R. S. சுதாகரன் | S. சிதம்பரநாதன் |

5-30 மணி

**தவில் கச்சேரி**

| | |
|---|---|
| K. நித்தியானந்தம் | T. உதயசங்கர் |
| N. R. S. சுதாகரன் | N. R. S. ரவீந்திரன் |
| N. K. வீராச்சாமி | |

6-30 மணி

சமயச் சொற்பொழிவு

**த. சிவகுமாரன்**

(காரைநகர் கம்பன் கழக அமைப்பாளர்)

இங்ஙனம்
புதுறோட் சி. மு. கேணியடி
இளைஞர்கள்

(கி-434)

# தமிழீழபோருக்கு வெளிநாடுகள் உதவினல் அகதிகள்பிரச்னைக்கு தீர்வுகாணமுடியும்

## உலக அமைப்புகளுக்கு திலகர் யோசனை

(ஹம்பேர்க்)

"வெளிநாடுகள் இலங்கைக்கு உதவி செய்யும் வரை அகதிகள் பிரச்னைக்குத் தீர்வு காணமுடியாது. தமிழ்மக்கள் அநீதியை எதிர்த்துப்போராட்டம் நடத்தி வருகின்றனர். இந்தப் போராட்டத்திற்கு வெளிநாடுகள் உதவி செய்தால் தமிழ் அகதிகள் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு காண முடியும்" இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மத்திய குழு உறுப்பினரும், சர்வதேசப் பேச்சாளருமான திரு. லோறன்ஸ் திலகர் தெரிவித்துள்ளார்.

ஜெர்மன் ஹம்பேர்க் நகரில் வெளிநாட்டவர் ஒன்றுகூடல் அமைப்புக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

பல நாடுகளைச் சேர்ந்த 43 அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட இந்த ஒன்றுகூடலில் தமிழீழத்தின் பிரதிநிதியாக திரு திலகர் கலந்து கொண்டார்.

அவர் மேலும் அங்கு உரையாற்றுகையில் கூறியதாவது:

தமிழீழ மக்கள் ஸ்ரீலங்கா அரசுடன் நடத்துவது ஒரு வரலாற்று ரீதியிலான போராட்டமாகும். இப்போராட்டத்தின் காரணமாக சுமார் ஐந்து லட்சம் தமிழர்கள் வெளிநாடுகளில் அகதிகளாக வாழ்கின்றனர்கள் இந்தியாவில் இரண்டு லட்சம் பேரும், மேற்கு நாடுகளில் மூன்று லட்சம் பேரும் அகதிகளாக தஞ்சமடைந்துள்ளனர்.

மொழி, கல்வி, தொழில், குடியுரிமைப் பறிப்பு, அடக்குமுறை ஆகியவற்றினால் பாதிக்கப்பட்ட தமிழ்மக்கள் ஸ்ரீலங்கா அரசிடம் நியாயம் கேட்டு 15 ஆண்டுகளுக்கு மேலாக விடுதலைப் புலிகளின் தலைமையில் போராடி வருகின்றனர். மனித உரிமை மீறலில் இன்று இலங்கை முதலாவது இடத்தை வகிக்கின்றது. மூன்று ஆண்டுகளில் மூன்று லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். அதேவேளை இலங்கைக்கு ஐரோப்பிய நாடுகள் 80கோடி டாலர் நிதியுதவி செய்தது. இந்த நிதியில் 50 கோடி டாலர் நிதியை தமிழ்மக்களை அழிப்பதற்கு அரசு பயன்படுத்துகிறது. பயங்கர ஆயுதங்களை வாங்குவதிலேயே அரசு அதிக அக்கறை காட்டி வருகின்றது. வெளிநாடுகளிலிருந்து பெறப்படும் உதவிகள் மக்கள் நலவாழ்வுக்குப் பயன்படுத்துவதை வெளிநாடுகள் உறுதி செய்யவேண்டும் அல்லது உதவிகளை நிறுத்த வேண்டும்.

இலங்கையில் தமிழ்மக்கள் சுதந்திரமாக வாழ வழி செய்யப்படவேண்டும். அவ்வாறானதொரு நிலை ஏற்படும் பட்சத்திலேயே அகதிகள் பிரச்னைக்குத் தீர்வு காண முடியும். வெளிநாடுகள் இலங்கைக்கு உதவி செய்யும் வரை அகதிகள் பிரச்னைக்கு தீர்வு காண முடியாது என்றும் திரு. திலகர் தமது உரையில் மேலும் தெரிவித்தார்.

பல நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகளும் இச்சந்திப்பில் உரையாற்றினர்கள். (ரி)

# அகதிகள் கட்டாயப்படுத்தி திருப்பி அனுப்பப்படுகிறார்கள்

## தமிழர் கழகம் கவலை

(சென்னை)

தமிழகத்திலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளைக் கட்டாயப்படுத்தி அவசரம் திருப்பி அனுப்பப்படுவதாக ஈழத் தமிழர் பாதுகாப்பு கழகம் கவலை தெரிவித்துள்ளது.

இது குறித்து இந்தியப் பிரதமர், உள்துறை அமைச்சர், தமிழக ஆளுநர், முதலமைச்சர், ஆகியோருக்கு கடிதங்கள் மேற்படி கழகத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தமிழகத்திலிருந்து ஈழ அகதிகள் சொந்த விருப்பத்தின் பேரில் திருப்பியனுப்பப்படுகின்றனர் எனக் கூறப்படுகிறது. இது உண்மையல்ல. இம்மாதம் திருகோணமலைக்கு கப்பலில் சென்ற அகதிகளும், செல்லவுள்ள அகதிகளும் வெளியிடுகின்ற உணர்வுகளும் அறிக்கைகளும் இதனை உணர்த்துகின்றன என்று ஈழத் தமிழர் பாதுகாப்புக் கழகம் மேலும் தெரிவித்துள்ளது —ரி

### சனசக்தியில் பங்காளர்

(யாழ்ப்பாணம்)

சனசக்தி நம்பிக்கைப் பொறுப்பு நிலையத்தில் மலைகம் கிராம அபிவிருத்திச் சங்கம் ஓர் பங்காளராக அங்கீகாரம் பெற்றுள்ளது. வடமாகாணத்தில் முதன்முதலாக ஒரு பங்காளராக இடம்பெறும் தாபனம் மலைகம் கிராம அபிவிருத்திச் சங்கம் என்பது குறிப்பிடத்தக்கது. (ரி)

### பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்களாக நியமனம் பெறத் தெரிவு செய்யப்பட்ட 31 பேரில் இன்னமும் யாழ்ப்பாணக் கல்வித் திணைக்களத்திற்கு வந்து (4-ம் பக்கம் பார்க்க)

### இராசிபலன்

30-08-1993
திங்கட்கிழமை
(தமிழுக்கு ஆவணி 14)

சதுர்த்தசி முழுவதும்: திருவோணம் பி. ப. 3-08 வரை அமிர்த சித்தயோகம் இராகு காலம் காலை 7-35 முதல் 9-05 வரை: சுபநேரம் நண்பகல் 12-05 முதல் 1-33வரை ஆவணி ஓணம்.

மேடம்: எளிமையான சூழ்நிலை தொழில் வளம் மன சந்தோஷம்.

இடபம்: குறை கேட்டல், சகோதர துன்பம், குடும்ப அமைதிக் குறைவு.

மிதுனம்: உடல் பாதிப்பு, தவறான செயல், குழப்பநிலை,

கடகம்: தொழில் லாபம், காரிய சித்தி, அறிஞர் சந்திப்பு.

சிங்கம்: சமரச முயற்சி, குடும்ப உறவு, சுபகாரியம்.

கன்னி: வாக்குவாதம். தொழில் பகைமை, குடும்ப முறுமுறுப்பு.

துலாம்: பணப்பற்றாக் குறை, மனச்சலனம், கருத்து வேறுபாடு.

விருச்சிகம்: தாய்வழி உறவு. கனிவான போக்கு, பயணம்.

தனுசு: கைப்பொருள் இழப்பு, ஏமாற்றம், குடும்பப் பிரிவு

மகரம்: காரிய வெற்றி, தொழில் உதவி, உல்லாசப் பயணம்

கும்பம்: உறவினர் வெறுப்பு, கடமை தவறுதல் வீண் சினம்.

மீனம்: கௌரவம், பழைய நினைவுகள், விருந்துபசாரம்.

ஜோஸ்யர்

# ஆலயங்கள் மீதான விமானத் தாக்குதல்களுக்கு இந்து அமைப்புகள் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

ஆலயங்கள் மீதும், தரும நிலையங்கள் மீதும் மேற்கொள்ளப்படும் வான் தாக்குதல்களை இந்துசமய அமைப்புகள் கண்டித்துள்ளன.

இது தொடர்பாக மேற்படி நிறுவனங்கள் வெளியிட்டுள்ள பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஆலயங்கள் மீதும் தரும நிலையங்கள் மீதும் மேற்கொள்ளும் விமானத் தாக்குதலையும். தரைவழித் தாக்குதலையும் உடன் நிறுத்தப்பட வேண்டும்.

இந்து கலாசார சின்னங்களைச் சீர்குலைத்து, வெள்ளிக்கிழமை வழிபாட்டு நேரத்தில் ஆகஸ்ட் 27ம் திகதி சுழிபுரம் பறாளாய் விநாயகர் ஆலயம், ஜம்புனேஸ்வர சிவன் கோவிலிலும், ஆகஸ்ட் 28 ல் தெல்லிப்பழை துர்க்கையம்மன் கோயில் வருடாந்த உற்சவ தினத்திலும் மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதலையும், தரைத் தாக்குதலையும் இந்து இளைஞர் பேரவையின் சார்பிலும், இந்து சமய நிறுவனங்கள் சார்பிலும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இதனால் பக்தர்கள் பலியாகியும், படுகாயம் அடைந்தும் உள்ளனர். இவர்களது குடும்பங்களுக்கு ஆறுதலையும், எமது அனுதாபத்தையும் வேதனையுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். (ரி)

### மடு பகுதியில் மக்கள் வங்கி

(மன்னார்)

மன்னார் மாவட்டத்திலுள்ள முருங்கன் மக்கள் வங்கிக் கிளை மூடப்பட்டிருப்பதால் அதை மடுப்பகுதி அகதிமுகாம் அருகில் நிறுவுவதற்கு மக்கள் வங்கி வடபிராந்திய முகாமையாளர் திரு. எஸ். அருளானந்தம் நடவடிக்கை எடுத்துள்ளார். முருங்கன் செட்டிகுளம் பகுதி மக்கள் இடம்பெயர்ந்து மடு அகதி முகாமில் இருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. [59]

# படையினர் சடலங்களை தேடி தீவிர ரோந்து

(கொழும்பு)

பருத்தித்துறைக்கு அப்பால் உள்ள கடலில் நேற்று அதிகாலை விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படை அணி மேற்கொண்ட தாக்குதலில், கடற்படைப் பீரங்கிப் படகு ஒன்று பலத்த சேதம் அடைந்ததாகவும், 4 கடற்படை அதிகாரி உட்பட 12 கடற்படையினரைக் காணவில்லை எனவும் கூட்டுப்படைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

வெடிமருந்துகளை நிரப்பிக் கொண்டு வந்த புலிகளின் தற்கொலைப் படையினரே பீரங்கிப் படகு மீது தாக்குதல் நடத்தியதாகவும், காணமற்போன படையினரை விமானப் படையினரும், கடற்படையினரும் தொடர்ந்து தேடி வருவதாகவும் கூட்டுப் படைத் தலைமையகம் தெரிவித்தது.

இப்பணியில் ரோந்து விமானங்களும், ரோந்துக் கப்பல்களும் ஈடுபட்டுள்ளனவாம்.

-க-இ

**காட்டின் வளமே நாட்டின் பலம்**

### துர்க்கையே!

துர்க்கையே! உனக்குச் சந்தோசம் உண்டாக்கினால் சகல ரோகங்களும் அகலும். உனக்குக் கோபமுண்டாக்கினால் சர்வ காமங்களும் பயனற்றுப் போகும். உன்னை அண்டினவர்க்கு ஆபத்தே கிடையாது. உன்னை அண்டினோர் பிறரால் ஆசீர்வதிக்கத் தக்கவராவர்!

— துர்க்கா சப்த சுலோகி

[தெல்லிப்பழை துர்க்காதேவி அம்பாள் 12-ம் நாள் தீர்த்த உற்சவம்]

### மணிவாக்கு

'பலவீனமானவர்களின் பாதையில் தடையாக இருக்கும் கருங்கல் பலமானவர்களின் பாதையில் படிக்கற்களாய் மாறிவிடும்'

—தாமஸ் கார்லைல்

## நமது நோக்கு

### பாவம், ஓய்வூதியர்கள்!

அரசாங்க சேவையில் எண்ணிக்கையோடும் கடமையுணர்வோடும் நீண்டகாலம் உழைத்தவர்கள், ஓய்வு காலத்தை நிம்மதியாகக் கழிப்பதற்கு வழங்கப்படுவது தான் ஓய்வூதியம்.

இன்றைய வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ள வேளையில், கிடைக்கும் ஓய்வூதியம் போதுமானதாக உள்ளதா? மருத்துவச் செலவு, போஷாக்குணவு ஆகியன ஓய்வூதியருக்கே அதிகம் தேவைப்படுகின்றது.

ஓய்வூதியம் என்பது ஏதோ அரசு இரக்கத்தில் அளிக்கும் நன்கொடை அல்ல. அரச பணியில் சேரும்போதே ஓய்வூதியம் வழங்கப்படும் நிபந்தனை ஆட்சேர்ப்பு விதியில் காணப்படும்.

காலத்திற்குக் காலம் வகுக்கப்பட்ட ஓய்வூதியக் கொள்கை மாற்றங்களின்போது அவை மேற்றபடி சட்டத் திருத்தங்கள் செய்யப்பட்டனவேயன்றி முழு ஓய்வூதியச் சட்டமும் புதிதாக மாற்றி அமைக்கப்படவில்லை. விளைவு என்ன? ஓய்வூதியம் வழங்குவதில் பல முரண்பாடுகள் தோன்றின.

புதிய ஜனாதிபதியாக டி. பி. விஜயதுங்கா பதவி ஏற்றதும் சகல ஓய்வூதியர்களுக்கும் வாழ்க்கைச் செலவு படி வழங்கப்படும் என வானொலி, பத்திரிகைச் செய்திகள் வந்தன.

நடந்தது என்ன? தேர்தல் முடிந்ததும், இது எல்லோருக்கும் அல்ல, ஒரு சில பிரிவினருக்கே என்ற சுற்றுநிருபம் வந்தது.

இந்த 260/- கூட முன்னர் வாக்களிக்கப்பட்டு பல காலமாக இழுபறிப்பட்டு வந்த சங்கதியே!

பிரிட்டன், சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளில் அரச ஊழியருக்குச் சம்பள உயர்வு வழங்கப்படும்போது, அதே விகிதாசார அடிப்படையில் ஓய்வூதியருக்கும் அதிகரிப்பு வழங்கப்படுகின்றது.

அரச ஊழியருக்கு முப்பது சதவீத சம்பள அதிகரிப்பு வழங்கப்படும் என்ற அறிவிப்பு வந்தபோது ஓய்வூதியர்களுக்கு 300/- மட்டுமே அதிகரிக்கப்பட்டது.

"நாடாளுமன்ற உறுப்பினர்களையும் அரச ஊழியர் எனக் கணித்து 30 சதவீதம் சம்பள உயர்வு அதிகரித்த அரசு எங்களை இப்படிப் புறக்கணிக்கலாமா?" என ஓய்வூதியர்கள் கொதிப்படைந்தது நியாயமானதே!

ஓய்வூதியர்களின் முரண்பாடுகளை நீக்கிப் பிரச்னைகளை ஆராய ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

ஓய்வூதியர் சங்கங்கள் ஆணித்தரமான காரணங்களை முன்வைத்து, அறிக்கை தயாரித்து ஆணைக்குழுவிற்கு அனுப்ப வேண்டும்!

